**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.**

**O.S.No.264/2014**

**நாள்.11.04.2026**

**வா.சா.1 - ராஜம்மாள்**

**1, 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் எந்த ஊரில் இருக்கிறேன் என்றால் திருவேங்கடம். எனது கணவர் பெயர் சூரியன் என்றால் சரிதான். மேற்படி சூரியன் அப்பா பெயர் செந்தூரான் என்றால் சரிதான். செந்தூரான் மனைவி சிங்கம்மாள் உயிருடன் இருக்கிறாரா என்றால் இல்லை இறந்து 40 வருடங்கள் இருக்கும். மேற்படி சிங்கம்மாள் முதலில் செந்தூரானுடன் திருமணமாகி அவருடன் வாழாமல் ஜாதி சமய வழக்கத்தின்படி விவாகரத்து பெற்றுக்கொண்டு இரண்டாவது திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். செந்தூரான் அதன்பிறகு ராக்கம்மாள் என்பவரை இரண்டாவது திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். மேற்படி சிங்கம்மாள் போனபிறகு செந்தூரான் மற்றும் ராக்கம்மாள் சேர்ந்து சூரியனை வளர்த்தார்கள் என்றால் சரிதான். மேற்படி ராக்கம்மாளுக்கு கணேசன் மற்றும் சண்முகவேல் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். சண்முகவேல் என்பவர் திருமணம் ஆகாமல் தனது 18 வயதில் இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது கணவர் இறந்தபிறகு அவருக்கு நான் மற்றும் திணேஷ்மணி, பூமாரி, ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். திணேஷ்மணி எப்போது இறந்தார் என்றால் 15 ஆண்டுகளுக்கு முன்பாக இறந்துவிட்டார். திணேஷ்மணி என்பவர் எனது மகள் என்றால் சரிதான். திணேஷ்மணிக்கு கணவர் குணசேகரன் மகன் கணேஷ்பாபு வாரிசு என்றால் சரிதான். ராக்கம்மாள் மகன் கணேசன் காலம்சென்றுவிட்டார் என்றால் சரிதான். கணேசனுக்கு 1 முதல் 5 பிரதிவாதிகள் வாரிசு என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு போட்டுள்ளேன் என்றால் நான் அனுபவிக்கிற காட்டை இடைஞ்சல் செய்யக்கூடாது என வழக்கு போட்டுள்ளேன். எங்களுக்குள்ளாக எழுத்துமூலமாக எந்த பாகப்பிரிவினையும் செய்யவில்லை வாய்மொழியாக யாருக்கு எந்த இடம் என ஒதுக்கி அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். வாய்மொழியாக யாருக்கு எந்த இடம் என ஒதுக்கியது 1987 தை மாதம் என்றால் சரிதான். இந்த வழக்கில் சொல்லிய சொத்தின் சர்வே எண் என்ன என்றால் தெரியாது. சர்வே எண்.906 ல் மொத்தம் 3 ஏக்கர் 40 செண்ட் உள்ளது என்றால் சரிதான். 3 ஏக்கர் 40 செண்டில் தான் கணேசன், சூரியன் மற்றும் ராக்கம்மாளுக்கு பாகம் பிரிக்கப்பட்டது என்றால் கணேசன், சூரியனுக்கு மட்டும் தான் ஒதுக்கப்பட்டது ராக்கம்மாளுக்கு

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.04.11 18:23:31 +0530

ஒதுக்கப்படவில்லை. சர்வே எண்.906 ல் 42 ½ செண்ட் மற்றும் புல எண்.544/1 ல் உள்ள கதவு எண்.76 வீடு சூரியனுக்கு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். புல எண்.544/1 ல் உள்ள கதவு எண்.76 வீட்டினை சூரியன் பொன்னுத்தாய்க்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. புல எண்.544/1 ல் உள்ள கதவு எண்.76 வீட்டினை சூரியன் பொன்னுத்தாய்க்கு கிரையம் கொடுத்துவிட்டார் அதை மறைத்துஇந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தபசில் 4 வது அயிட்ட புல எண்.544/1 ல் உள்ள கதவு எண்.76 வீட்டில் பொன்னுத்தாய் தான் குடியிருக்கிறார் என்றால் பொன்னுத்தாய் குடியிருக்கவில்லை அவர் மேற்படி வீட்டை அடைத்து வைத்துள்ளார். சர்வே எண்.906 ல் 42 ½ செண்ட் சூரியனுக்கு கொடுத்ததுபோக மீதி சொத்து அவர் சித்தி ராக்கம்மாளுக்கு ஒதுக்கப்பட்டு அவர் தான் அனுவித்து வந்தார் என்றால் சரிதான். இந்த வழக்கு ராக்கம்மாளுக்கு ஒதுக்கப்பட்ட பாகத்தையும் சேர்த்துதான் வழக்கு நடக்கிறது என்றால் சரிதான். இந்த வழக்கில் தபசில் 4 வது அயிட்ட புல எண்.544/1 ல் உள்ள கதவு எண்.76 வீட்டின் உரிமையாளரான பொன்னுத்தாய் மற்றும் ராக்கம்மாள் அவசியகட்சி என்றால் சரிதான். மேற்படி பொன்னுத்தாய் மற்றும் ராக்கம்மாளை கட்சி சேர்க்காததால் இந்த வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது கணவர் சூரியனுக்கு சர்வே எண்.906 ல் 42 ½ செண்ட் மற்றும் புல எண்.544/1 ல் உள்ள கதவு எண்.76 வீடு மட்டும் தான் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். சூரியன் தந்தைக்கு மொத்தம் 4 சொத்து தான் பாத்தியம் என்றால் சரிதான். தபசில் 2 வது அயிட்ட சொத்தில் தென்புறம் 53 ல் கணேசனுக்கு வீடு மற்றும் இடம் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். கணேசனுக்கு சர்வே எண்.535/2 ல் 20 செண்டில் உள்ள இடமும், சர்வே எண்.535/2 ல் உள்ள வீடும் காலி இடமும், கிணறும் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். கணேசனுக்கு வாய்மொழியாக கிடைத்து அனுபவித்து வந்த சொத்தை அவரது மக்கள் பாகப்பிரிவினை பத்திரமாக பதிவு செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினை 22.10.2012 ல் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். பாகப்பிரிவினை பாகத்தின்படி கிடைத்த சொத்து உட்பிரிவு செய்ததில் புல எண்.535/2H ல் உள்ள காலி இடமும், அதில் உள்ள 1/11 வீடும் புல எண்.535/2E என கலைச்செல்வன் பெயரில் பட்டா எண்.141 ஏற்பட்டுள்ளது என்றால் சர்வே எண் தெரியாது பாகப்பிரிவினை செய்து பட்டா பெற்றுவிட்டார்கள். புல எண்.535/2E க்கு

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.04.11 18:23:37 +0530

பட்டா எண்.5040 என 4 வது பிரதிவாதிக்கு பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் தெரியாது. நான் திருவேங்கடத்தில் எத்தனை வருடமாக குடியிருக்கிறேன் என்றால் சுமார் 30 வருடம். சூரியன் என்னுடன் திருவேங்கடத்தில் குடியிருந்தார் என்றால் சரியல்ல அவர் இறந்தபிறகு தான் திருவேங்கடத்தில் நான் குடியிருக்கிறேன். நான் தாக்கல் செய்த வா.சா.ஆ.2 பாகவிஸ்தி ஆவணம் மோசடியானது என்றால் சரியல்ல. கணேசனுக்கும் வா.சா.ஆ.2 பாகவிஸ்தி ஆவணத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. சூரியனுக்கு முன்பாகவே செந்தூரான் இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. செந்தூரானுக்கு கையெழுத்து போடும் வழக்கம் கிடையாது கைநாட்டு தான் வைப்பார் என்றால் சரிதான். எனது குழந்தைகளுக்கு எனது கணவர் இறந்தபிறகு நான் தான் கார்டியன் வேறு நபர்கள் கார்டியன் கிடையாது என்றால் சரிதான். எனது குழந்தைகளுக்கு மூன்றாவது நபர் கார்டியன் என்றும் அவர்களை பராமரித்ததாகவும் சொன்னால் அது பொய் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 முறையாக பதிவு செய்யப்பட்ட ஆவணம் அல்ல முறையாக முத்திரைகட்டணம் செலுத்தி பதிவு செய்யப்படாத ஆவணம் என்றும் அந்த ஆவணத்தின்படி உரிமைமூலம்அனுபவம் யாருக்கும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கு தபசில் சொத்தை நான் அனுபவிக்கவில்லை பொன்னுத்தாய்க்கு விற்பனை செய்துவிட்டேன் அதனால் எனக்கு வழக்கில் கேட்ட பரிகாரம் கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. எனது வழக்குரையில் கண்ட சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை என்றால் சரியல்ல. நான் விற்பனை செய்த சொத்திற்கு எனது அனுபவத்தில் இல்லாமல் பரிகாரம் கேட்பதால் எனக்கு வழக்கில் கேட்ட பரிகாரம் கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.04.11 18:23:43 +0530